[1975 ஏப்ரல் 18

* 680. வினா—திரு. ந. முத்துவேல்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வானூர் தொகுதியில் புதுக்குப்பம் கிராமத்திலுள்ள அரசினர் மாணவர் விடுதிக்குப் புதிய கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: தென்னார்க்காடு மாவட்டம், வானூர் தொகுதியில் புதுக்குப்பம் கிராமத்திலுள்ள, அரசினர் மாணவர் விடுதிக்குப் புதிய கட்டடம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் அரசிடமில்லை.

திரு. செ. அரங்கநாயகம்: ஆன் எ பாய்ண்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரம் முடிந்து விட்டது என்று இன்னும் நான் சொல்லவில்லை. அதற்குள் பாய்ண்ட் ஆப் ஆர்டர் என்றால் எப்படி?

வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

திரு. அரங்கநாயகம் அவர்கள் இப்பொழுது பேசலாம்.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப் பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## (3) தகவல் கோரல்

### தாம் பேசிய பேச்சில் சில சொற்றொடர்கள் நடவடிக்கைக் குறிப்பில் காணப்படாதது குறித்து.

திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, இந்த மாமன்றத்தில் உறுப்பினர்கள் பேசுகின்ற பேச்சுக்கள் எல்லாம் பதிவு செய்யப்படுகின்றன. பத்திரிகையிலும் போடுகிறார்கள். அப்படி உறுப்பினர்கள் பேசுகின்றபோது தவறான அல்லது அன்பார்லமெண்டரி வார்த்தைகள் வந்திருந்தால் அவைகளை எக்ஸ்பஞ்ச் செய்துவிடுகிற காரணத்தால் அதைப் பத்திரிகைகளில் போடுவது இல்லை. ஆனால் சில சமயங்களில் எக்ஸ்பஞ்ச் செய்யாத வார்த்தைகள் கூட ப்ரொசீடிங்சில் இல்லாமல் இருக்கின்றன. ஆனால் அவைகளைப் பத்திரிகையில் போட்டுவிடுகிறார்கள். அப்படிப் போடுவதால் பத்திரிகைகளுக்குச் சில சமயங்களில் சங்கடங்கள் வருகின்றன. உதாரணத்திற்கு கல்வி மானியத்தில்